# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 6th Term Examination - 2021

FWC

**இந்து நாகரிகம் I**
**Hindu Culture I**

**Two hours**

**Gr -13 (2021)**

**46** **T** **I**

### பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. யாகக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேதம்.
 1) இருக்கு வேதம் 2) யசுர்வேதம் 3) சாமவேதம் 4) அதர்வ வேதம் 5) ஆயுர்வேதம்

02. இருக்கு வேதத்தில் படைப்புக்குரிய தெய்வம் எனப் போற்றப்படுபவன்.
 1) பிரஜாபதி 2) இந்திரன் 3) வருணன் 4) மித்திரன் 5) சோமன்

03. சங்க இலக்கியங்களில் நெய்தல் நிலத் தெய்வமாகப் போற்றப்படுபவர்.
 1) முருகன் 2) கொற்றவை 3) இந்திரன் 4) வருணன் 5) விஷ்ணு

04. "இந்து சமயக் கலைக்களஞ்சியம்" எனப் போற்றப்படுவது.
 1) ஆகமங்கள் 2) உபநிடதங்கள் 3) ஸ்மிருதிகள்
 4) வேதங்கள் 5) இதிகாசங்கள்

05. கருட புராணம் சிறப்பாக குறிப்பிடும் விடயம்.
 1) ஆணவத்தை அழித்தல் 2) பக்தியின் சிறப்பு
 3) தெய்வீக வரலாறுகள் 4) பாவச் செயல்களும் பிராயச்சித்தமும்
 5) தீர்த்தம், தலச்சிறப்பு

06. "பிரபக்தியைக் கைக்கொள்வதன் மூலம் முத்தியடையலாம்" எனக் குறிப்பிட்டவர்.
 1) இராமானுஜர் 2) சங்கரர் 3) மத்துவர் 4) தாயுமானவர் 5) சுந்தரர்

07. திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவுசெய்யும் முறை பற்றி கூறுவது.
 1) தருபரீட்சணம் 2) கர்ஷணம் 3) பிரதிட்டை
 4) சிலாபரீட்சணம் 5) பிரதிமாலட்சணம்

08. மகாபாரதத்தில் அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் பற்றி போதிக்கும் பருவம்.
 1) சாந்தி பர்வம் 2) ஆதிபர்வம் 3) வீஷ்ம பர்வம்
 4) துரோண பர்வம் 5) மோட்ச பர்சம்

09. பிரமதேயம், அக்கிரகாரங்கள் எழுச்சி பெற்ற காலம்.
 1) சங்க காலம் 2) சங்கமருவிய காலம் 3) பல்லவர் காலம்
 4) சோழர் காலம் 5) நாயக்கர் காலம்

10. உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரக் கோயில் பற்றி பாடிய புராணம்.
 1) சேது புராணம் 2) காஞ்சி புராணம் 3) தணிகைப் புராணம்
 4) அருணாசல புராணம் 5) கோயிற் புராணம்

11. பிரபக்தி மார்க்கத்தை மதுர பாவனையில் வெளிப்படுத்திய பக்தி நெறியாளர்.
 1) இராமானந்தர் 2) கபீர்தாசர் 3) மீராபாய் 4) துளசிதாசர் 5) ஸ்ரீசைதன்யர்

12. "பசியுள்ளவனுக்கு சமயப் போதனை ஆகாது" என்ற கொள்கை கொண்டவர்.
 1) சுவாமி இராமகிருஷ்ணர் 2) சுவாமி விவேகானந்தர்
 3) ராஜாராம் மோகன்ராய் 4) சுவாமி தயானந்த சரஸ்வதி 5) மூலசங்கரன்

13. சோழராட்சியில் "மும்முடிச் சோழ மண்டலம்" என அழைக்கப்பட்டது.
 1) இலங்கை 2) பொலநறுவை 3) அனுராதபுரம் 4) பதவியா 5) மன்னார்

14. “கிறிஸ்தவ கண்டன குடாரி” என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவர்.
1) ஆறுமுகநாவலர் 2) கா.அருணாசல தேசிகர் 3) சுவாமி விபுலானந்தர்
4) காசிவாசி செந்திநாதையர் 5) கைலாசநாதக் குருக்கள்

15. நவராத்திரி தினத்தில் “ஸ்ரீசக்கர பூசை” விசேடமாக நடைபெறும் திருத்தலம்.
1) திருக்கேதீஸ்வரம் 2) திருக்கோணேஸ்வரம் 3) முன்னேஸ்வரம்
4) நகுலேஸ்வரம் 5) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

16. “தேவராஜ வழிபாடு” சிறப்புப் பெற்ற நாடு.
1) மலேசியா 2) தாய்லாந்து 3) ஜாவா 4) சம்பா 5) கம்போடியா

17. பாறைகளை மேல் இருந்து கீழாக செதுக்கி அமைக்கப்பட்ட கோயில்கள்.
1) கட்டுத்தளிகள் 2) மலைதனிகள் 3) குடைதளிகள்
4) குடைவரை 5) கற்றளிகள்

18. இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய விக்கிரகங்களை எவ்வாறு அழைப்பர்.
1) சலவிக்கிரகம் 2) அலச விக்கிரகம் 3) சிற்பங்கள்
4) சலாசல விக்கிரகம் 5) கல் விக்கிரகம்

19. “அறிதுயில் நிலை” என தமிழில் உரைப்பது.
1) நடராஜ வடிவம் 2) திரிபுராந்தகர் 3) இலிங்கோற்பவர்
4) அனந்தசயனம் 5) தட்சணாமூர்த்தி

20. சிறந்த “சந்த லயம்” கொண்ட பாடல்கள்.
1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருப்புகழ் 4) திருவிசைப்பா 5) திருப்பல்லாண்டு

21. வெளிப்புற ஊடக சாதனங்கள் கொண்ட தொகுதி.
1) பக்திப் பாடல்கள், பொதுக்கூட்டம், பிரசங்கம்
2) ஒலிநாடா, ஒளிநாடா, ஓலைச்சுவடிகள்
3) பொதுக்கூட்டம், கதைப் பாடல்கள், முரசறைதல்
4) விளம்பரப் பலகை, சித்திரங்கள், சிற்பங்கள்
5) பொது விவாதம், பிரசங்கம், மகாநாடு

22. மருத்துவ சிந்தனைகள் அதிகம் கொண்ட வேதம்.
1) இருக்குவேதம் 2) யசுர் வேதம் 3) சாமம் வேதம் 4) அதர்வணவேதம் 5) ஆயுர்வேதம்

23. புராதன கல்வி முறையை பரவித்யா, அபரவித்யா என இரு வகைப்படுத்திக்கூறும் உபநிடதம்.
1) முண்டக உபநிடதம் 2) சாந்தோக்கிய உபநிடதம்
3) கேன உபநிடதம் 4) பிருகதாரணிய உபநிடதம் 5) தைத்திரிய உபநிடதம்

24. விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு.
1) பிரமயக்ஞம் 2) தேவயக்ஞம் 3) பிதிர்யக்ஞம் 4) பூதயக்ஞம் 5) மானிடயக்ஞம்

25. “கேவலம்” என்ற தனிமைக் கொள்கையை முன்னெடுத்தவர்.
1) சங்கரர் 2) இராமனுஜர் 3) மத்துவர் 4) கௌடபாதர் 5) ஸ்ரீகண்டர்

26. சிவஞான போதத்தின் சார்பு நூலாக அமைவது.
1) உண்மை விளக்கம் 2) சிவப்பிரகாசம் 3) வினாவெண்பா
4) கொடிக்கவி 5) திருவருட்பயன்

27. “ஆகந்துக மலம்” என குறிப்பிடப்படுபவை.
1) ஆணவம், கன்மம் 2) ஆணவம், மாயை 3) ஆணவம், மூலமலம்
4) மாயை, சகசமலம் 5) கன்மம், மாயை

28. “எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது” என்ற கருத்தை வலியுறுத்தும் நூல்.
1) வேதம் 2) புராணம் 3) பகவத்கீதை 4) திருமந்திரம் 5) திருக்குறள்

29. மறுமைப்பயன் கருதி ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஆயத்தமாகும் நிலை.
1) பிரமச்சரியம் 2) இல்லறநிலை 3) வானப்பிரஸ்தம் 4) சந்நியாசம் 5) கிருஹஸ்தம்

30. "முத்தி நிலையில்கூட ஆன்மா ஈஸ்வரனாவதில்லை" என்ற கொள்கை கொண்டவர்.
1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர் 4) சைவசித்தாந்திகள் 5) ஸ்ரீகண்டர்

31. கிரியைகள் மூலமாக வாழ்வில் முழுமைபெற முடியாத நிலையில் ஏற்பட்ட ஆன்மீகத் தேடலாக எழுந்தவை.
1) வேதங்கள் 2) உபநிடதங்கள் 3) இதிகாசங்கள் 4) சைவசித்தாந்தம் 5) பகவத்கீதை

32. உருத்திரனுக்கு பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையை கூறுவது.
1) இருக்கு 2) சாமம் 3) அதர்வணம் 4) சுக்கில யசுர் 5) கிருஷ்ணயசுர்

33. தென்னக வரலாற்றில் வார்ப்பு விக்கிரகங்கள் படைக்கப்பட்ட காலம்.
1) நாயக்கர் காலம் 2) பாண்டியர் காலம் 3) சங்க காலம்
4) பல்லவர் காலம் 5) சோழர் காலம்

34. "இறைவன் ஒருவரே உண்மை எல்லோரும் வாருங்கள்" என்று சமய சமூக ஒருமைப்பாட்டினை இணைத்தவர்.
1) இராம கிருஷ்ணர் 2) சுவாமி விபுலானந்தர்
3) சுவாமி விவேகானந்தர் 4) ராஜாராம் மோகன்ராஜ் 5) சுவாமி தயானந்த சரஸ்வதி

35. "சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம்" என வருணிக்கப்படும் ஆலயம்.
1) தஞ்சைப் பெருங்கோயில் 2) மூவர் கோயில்
3) ஐராவதேஸ்வரம் 4) கங்கை கொண்ட சோழேஸ்வரம்
5) விஜயாலய சோழேஸ்வரம்

36. சைவசித்தாந்தக் கோட்பாட்டின் உயிர் நிலையாக விளங்குவது.
1) விவர்த்த வாதம் 2) சற்காரிய வாதம் 3) பிரதிவிம்ப வாதம்
4) அவச்சேத வாதம் 5) மாயா வாதம்

37. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற மருத்துவம் சார்பான நூல்.
1) சரசோதிமாலை 2) செகராசசேகரம் 3) கைலாயமாலை
4) இரகுவம்சம் 5) பரராசசேகரம்

38. உலகியல் சார்ந்த கலைத்துறைகளுக்கு முதன்மை அளித்த ஆரம்ப கால கல்விச்சாலை.
1) தட்சசீலம் 2) வாரணாசி 3) காசி 4) நாலந்தா 5) பாடலிபுரம்

39. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கோட்பாட்டை சாதனை வழியில் காட்டியவர்.
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரமூர்த்திநாயனார்
4) மாணிக்கவாசகர் 5) திருமூலர்

40. இந்துக்களின் அரசியல், பொருளாதாரக் கொள்கை பற்றி எடுத்துக்கூறும் நூல்.
1) மனுதர்ம சாத்திரம் 2) யோக சாத்திரம் 3) ஞானாமிர்தம்
4) அர்த்தசாத்திரம் 5) சுக்கிரநீதி

- **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>திதி | F<br>வேதவிருத்தி | K<br>மெய்கண்டதேவர் | P<br>பாதராயணர் |
| B<br>சாரீரக சூத்திரம் | G<br>அதர்வவேதம் | L<br>நட்சத்திரம் | Q<br>மாந்திரீகத்துக்கு முக்கியத்துவம் |
| C<br>நந்திக்கொடி | H<br>நான்கு இயல்கள் | M<br>545 சூத்திரங்கள் | R<br>கரணம் |
| D<br>12 சூத்திரங்கள் | I<br>கிழமை | N<br>6000 பாடல்கள் | S<br>பிடாரர்கள் |
| E<br>731 சூக்தங்கள் | J<br>நான்கு அத்தியாயம் | O<br>தேவரடியார் | T<br>சிவஞானபோதம் |

41. பஞ்சாங்கத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) B,F,K,R 2) C,G,L,Q 3) A,I,L,R 4) D,H,O,S 5) E,I,L,T

42. பிரமசூத்திரத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) B,J,M,P 2) E,H,O,R 3) D,J,N,P 4) A,G,L,T 5) C,J,N,P

43. சோழர் காலத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) E,I,M,S 2) A,I,K,T 3) B,H,L,S 4) A,G,O,T 5) C,F,O,S

44. சைவசித்தாந்த முதல்நூலோடு தொடர்புடைய தொகுதி.
1) B,F,L,O 2) D,H,K,T 3) A,F,L,R 4) C,J,O,S 5) E,J,M,Q

45. பிரமவேதத்தோடு தொடர்புடைய தொகுதி.
1) C,F,N,R 2) D,I,K,O 3) A,J,L,Q 4) E,G,N,Q 5) B,I,N,T

➢ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க.**

46. இந்துக்கலைக் கோட்பாடு
1) கட்டட, சிற்ப, ஓவியங்கள் கட்புலக் கலைகளாகும்.
2) ஆக்கத்திறன், அழகியல், மனமகிழ்ச்சி, இந்து தத்துவம் போன்றவற்றின் வெளிப்பாடு
3) கலை மரபு, இயல், இசை, நாடகமாக வெளிப்படுகின்றது.
4) கலை உருவாக்கம் என்பது தூய உளச் செயற்பாடு என பரதமுனிவர் குறிப்பிடுகின்றார்.
5) கலை என்பது இயல்பாகவே ஒழுங்கு விதியைக் கொண்டுள்ளது.

47. சைவப்புலவர் கா. அருணாசலதேசிகர்
1) மட்டக்களப்பு சுதேச இயக்கத்தின் பங்காளர்
2) சுவாமி விபுலானந்தருடன் தொடர்பு கொண்டிருந்தார்
3) சைவசமய பேச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார்
4) சமய போதனைகள் மேற்கொண்டமை
5) வைத்திய பணியில் 40 வருடங்கள் பணியாற்றினார்.

48. இந்துநாகரிகத்தின் தனித்துவமும் சிறப்பும்
1) ஆன்மீக விடுதலையாகிய முத்தி தத்துவத்தை இலக்காக கொண்டது
2) உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு
3) இறை ஆற்றலைவிட மானுட ஆற்றலே மேலானது என்னும் சிந்தனை
4) வைதிகநெறியின்படி இறை உண்மை, இறை நம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழ்தல்
5) சனாதன தர்மமாக விளங்குவது

49. இந்துக்களின் மருத்துவம்
1) இந்து மருத்துவமுறைகளுக்கு மேல்நாட்டு மருத்துவம் ஆதார சுருதியாக விளங்கியது
2) இந்து மருத்துவத்தில் நாள், கோள் பார்த்து வைத்தியம் செய்வது.
3) இந்துக்களின் மருத்துவக்கலை அறிவு இருக்கு வேதத்திலிருந்து ஆரம்பமாகின்றது
4) யோகாசனம், தியானம், விரதங்கள் போன்றன நோய்கள் ஏற்படாது காக்கின்றது.
5) இந்திய மருத்துவத்தின் தந்தையாக தன்வந்திரி போற்றப்படுகின்றார்.

50. சோழர் காலம் இந்துப் பண்பாட்டில் ஏற்படுத்திய செல்வாக்கு
1) நடராச சின்னம் சோழ அரசர்களது சின்னமாகியது
2) வேதவிருத்தி, புராண விருத்தி போன்றவற்றுக்கு மானியங்கள் வழங்கப்பட்டது.
3) சைவசித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெற்றது
4) அளவைக் கருவிகளில் நடராச சின்னம் பொறிக்கப்பட்டது.
5) இசைக் கலைஞர்களுக்கு ''வாத்ய வித்யாதரன்'' எனும் பட்டம் வழங்கப்பட்டது.

(50x2=100 புள்ளிகள்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Center, Thondaimanaru
# 6th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **இந்து நாகரிகம் II**<br>**Hindu Culture II** | **Three Hours 10 min**<br>**Gr -13 (2021)** | **46** | **T** | **II** |

### பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01. சிவாகமங்கள் இந்து நாகரிகத்தை வளம்படுத்தியவற்றை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.

அ) திருக்கோயில் வழிபாடு

ஆ) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்

இ) தத்துவ சிந்தனைகள்

ஈ) சிறப்புக்கள்

(5+5+5+5=20புள்ளிகள்)

02. "உபநிடதங்கள் இந்து தத்துவ வளர்ச்சியின் கருவூலங்கள்" என்பதனை மேல்வரும் தலைப்புக் களில் விளங்குக.

அ) தோற்றம் பெற்ற காலச் சூழல்

ஆ) ஆன்மா பற்றிய கருத்துக்கள்

இ) ஒழுக்க சிந்தனைகள்

ஈ) பிற்கால தத்துவ வளர்ச்சியின் பங்களிப்பு

(5+5+5+5=20புள்ளிகள்)

03. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட இந்து பண்பாட்டு வளர்ச்சியினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) அரசியல் சமூக சூழ்நிலை

ஆ) அரசர்களின் பங்கும் பணியும்

இ) நாயன்மார்களின் பங்களிப்பு

ஈ) திருக்கோயில்களின் வளர்ச்சி

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. இராமானுஜர் வேதாந்தத்தின் சிறப்புக்களை மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.
   அ) பரம் பொருட் கொள்கை
   ஆ) ஆன்மாவுக்கும் பரம்பொருளுக்கும் இடையிலான தொடர்பு

(10+10=20 புள்ளிகள்)

05. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்துக்களிடையே ஏற்படுத்திய சமூக மேம்பாடுகளை பரிசீலணை செய்க.

(20 புள்ளிகள்)

06. இந்துப் பண்பாட்டில் இசைக்கலை பெற்றுள்ள முக்கியத்துவத்தினை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. சைவ சித்தாந்தக் கோட்பாட்டில் ஆன்மா பற்றிய சிந்தனைகளை விளக்குக.

(20 புள்ளிகள்)

08. இந்து சமுதாய வளர்ச்சியில் இந்துக் கல்வி பெறும் இடத்தினை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.
   அ) இந்துக் கல்வி பாரம்பரியம்
   ஆ) இந்துக் கல்வியின் நோக்கம்

(10+10=20 புள்ளிகள்)